# காலிங்கராயனுக்கு சிலை, மணிமண்டபம் அமைக்க வேண்டும்

## கல்வெட்டு ஆய்வாளர் புலவர் ராசு

ஈரோடு, செப். 8: காலிங்கராயனுக்கு சிலை, மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்று கல்வெட்டு ஆய்வாளர் புலவர் செ. ராசு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈரோடு, கொங்கு கலையரங்கில் 'காலிங்கராயன் காவியம்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

**விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று அவர் பேசியது:**

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு கனகபுரத்தில் பிறந்த காலிங்கராயன், கொங்குநாட்டின் ஒரு பகுதிக்கு நிர்வாகியாக இருந்தார். அவர் புதுக்குளங்கள், நீர் நிலைகளை அமைத்தார். பல ஆண்டுகள் பழுதுபட்டு பாசனம் இல்லாமல் இருந்த பல குளங்களை புதுப்பித்தார். கோயில்களில் திருப்பணி செய்ததுடன், காடுகளை அழித்து விளைநிலமாக்கினார். உரிமையற்ற மக்களுக்கு பல்வேறு உரிமைகளை பெற்றுத் தந்தார்.

பவானி, நொய்யல், அமராவதி ஆறுகளை இணைக்கும் முயற்சியில் முன்னோடியாக திகழ்ந்தார். பவானி ஆற்றில் தடுப்பணை கட்டி 56.5 மைல் நீளத்துக்கு வாய்க்கால் அமைத்தார். இதைத்தொடர்ந்து காலிங்கராயன் வாய்க்காலில் வரும் கசிவு நீரை நொய்யல் ஆற்றில் தேக்கியதுடன், அணை கட்டி கரூர் அமராவதி ஆறு வரை வாய்க்கால் வெட்டும் பணிகளை தொடர்ந்தார்.

காலிங்கராயனுக்கு அரசு சார்பில் ஆண்டுதோறும் விழா எடுக்க வேண்டும்; வெள்ளோட்டில் சிலை அமைப்பதுடன் நினைவு மண்டபம் கட்ட வேண்டும்; அஞ்சல் தலை வெளியிட வேண்டும்.

இவற்றை நிறைவேற்றுவதே காலிங்கராயனுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்றார்.

விழாவில் 'காலிங்கராயன் காவியம்' என்ற கவிதை நூலை, ஈரோடு கொல்லம்பாளையத்தைச் சேர்ந்த கவிஞர் அ.செ.வேல்சாமி வெளியிட்டார்.டுள்ளார். இதில் ஆதித்யா, சூர்யா பதிப்பக உரிமையாளர் கார்த்திக் வேலுசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.



ஈரோட்டில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'காலிங்கராயன் காவியம்' என்ற நூலை வழக்குரைஞர் த.ராமலிங்கம் வெளியிட, பெற்றுக் கொள்கின்றனர் காலிங்கராயன் பாசன விவசாயிகள் வி.கே.வேலுமணி, எம்.ஆர்.சண்முகம். உடன் காலிங்கராயனின் வாரிசுகள் அகத்தூர் விஷ்ணு காலிங்கராயர், அருண்குமார் காலிங்கராயர், நூலாசிரியர் கவிஞர் அ.செ.வேல்சாமி, கல்வெட்டு ஆய்வாளர் புலவர் செ.ராசு, மற்றொரு வாரிசு சித்தார்த் ஏ.எம்.ஆர்.காலிங்கராயர்.